2021 பிப்ரவரி 26] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மக்களை கொரோனா பாதிப்பால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கத்திலிருந்து படிப்படியாக மீட்டு வருகின்றது.

முற்பகல் 11–35

இந்நிலையில், கொரோனா காலத்தில் ஏற்பட்ட குடும்ப நிதி நெருக்கடியை சமாளிக்க ஏழை, எளிய மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் கூட்டுறவு நிறுவனங்களில் தாங்கள் பெற்ற நகைக் கடனை திரும்ப செலுத்துவதில் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) கொரோனா தொற்று ஓரளவு குறைந்துள்ள போதிலும், இயல்பான பொருளாதார நடவடிக்கைகள் முழுமையாக மீளவில்லை. இந்நிலையில், விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஏழை, எளிய குடும்பங்கள் நகைக் கடன் பெற்று அதைத் திரும்ப செலுத்த முடியாத சூழ்நிலையை கருத்தில்கொண்டும், இதுகுறித்து பெறப்பட்ட கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்தும், பொருளாதார வல்லுநர்களின் கருத்துப்படியும், கொரோனா பாதிப்பு மற்றும் ஊரடங்கினால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பினால் கூட்டுறவுச் சங்கங்களில் நகைக் கடன் பெற்று திரும்ப செலுத்துவதில் சிரமத்திற்குள்ளான ஏழை, எளிய மக்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கூட்டுறவு நிறுவனங்களில் 6 பவுன் வரை அடகு வைத்து பெற்ற நகைக் கடன்களை தள்ளுபடி செய்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

(ஆ) மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்று, நிலுவையில் உள்ள கடன் தள்ளுபடி குறித்த ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலும், நகர்ப்புற குடிசைப் பகுதிகளிலும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்கள் சுய உதவிக் குழுக்களை அமைத்து அவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு மகத்தான வழியை வகுத்துத் தந்தார்கள். இன்றைய அளவில் தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கும்*

மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களில் 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்களில் உள்ள பெண்கள், பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் தங்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், சிறு தொழில் செய்யவும், கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று வருகின்றனர்.

கடந்த 2019 பிப்ரவரி முதல் கொரோனா நோய்த் தொற்று உலகமெங்கும் பரவி, மக்களின் இயல்பு வாழ்க்கையை பெரிதும் பாதித்தது. இதன் தாக்கம் இந்தியாவிலும் ஏற்பட்டது. தமிழ்நாடும் இதன் பாதிப்புக்குள்ளாகி, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்த நோய்த் தொற்றை கட்டுப்படுத்த மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்ற ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டு, தேவைப்படும் தளர்வுகளுடன் அது தொடர்ந்து அமலில் உள்ளது. நோய்த் தொற்றாலும், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளாலும் பாதிக்கப்பட்ட மக்களின் சிரமங்களை குறைக்க, நியாய விலைக் கடைகள்மூலம் அரிசி, பருப்பு போன்றவை அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லாமல் வழங்கியதுடன், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரொக்க உதவியும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மருத்துவ உதவிகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியது.

இந்நிலையில், கொரோனா தொற்று காலத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில், சுய உதவிக் குழுக்கள் தாங்கள் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களில் பெற்ற கடனை திரும்பச் செலுத்த இயலாத நிலையில் உள்ளதாகவும், அவர்களின் துயரை துடைக்க தமிழ்நாடு அரசு தங்களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கோரிக்கைகள் வைத்துள்ளனர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த ஏழை, எளிய பெண்களின் துயர் துடைக்க, அவர்கள் கூட்டுறவு வங்கிகளிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் பெற்று நிலுவையில் உள்ள கடன் தள்ளுபடி செய்யப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய திருத்தம். நான் பேசும்போது அனைத்து அட்டைதாரர்களுக்கும்

2021 பிப்ரவரி 26] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

ரூ.2,500/—கூடிய பொங்கல் பரிசு என்று சொன்னேன். அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் என்று மாற்றிக் கொள்ளவும். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது திருத்திக்கொள்ளப்படும்.*

3. கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்பதைக் கொடுப்பது, வேண்டுகோள் வைப்பதைத் தருவது என்பது சராசரி அரசினுடைய, ஒரு முதலமைச்சரினுடைய கடமையாக நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், கேட்காமலேயே, எவரும் கேட்காமலேயே (மேசையைத் தட்டும் ஒலி) விண்ணப்பங்கள் வராமலேயே, மக்களின் ஆழ்மனதில் இருக்கின்ற சங்கடங்களைப் புரிந்துகொண்டு, நாட்டு மக்களுடைய மகிழ்ச்சியே தன்னுடைய ஒரே இலட்சியம் என, (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை தலைமையேற்று, சிறப்பான பொற்கால ஆட்சி நடத்தி வருகின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்கள், விவசாயிகளுடைய நலனை பாதுகாப்பதே தன்னுடைய இலட்சியம் என்று, விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான், நாட்டு மக்கள் சோற்றிலே கை வைக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்டிருக்கின்ற, ஒரு விவசாயியாக இருக்கின்ற விவசாய முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 2,500/— பொங்கல் பரிசு கொடுத்ததோடு, பயிர்க் கடன் 12,110/— கோடி ரூபாயை, தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை எவரும் செய்யாத, உச்சபட்ச நிதி தள்ளுபடியை கொடுத்து, ஆணையிட்டு, நிதியையும் கொடுத்து, அப்போதே அமலாக்கிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது கூட்டுறவுச் சங்கத்தில், நகைக் கடன், விவசாய நகைக் கடன் முழுவதையும் இரத்து செய்திருக்கின்றார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். கூட்டுறவு நிறுவனங்களில் 6 பவுன் வரை அடகுவைத்து கடன் வாங்கியிருக்கின்ற அந்த விவசாயிகளினுடைய நகைக் கடன்களை இரத்து செய்வதற்கு, தள்ளுபடி செய்வதற்கு,*